
ஸ்ரீ:



நம்பெருமாள் சேர்த்தி - ஸ்ரீரங்கம்

ஸ்ரீ:



ஸ்ரீமதே ராமாநுஜாய நம: ஸ்ரீமத் வரவரமுநயே நம:

அப்பன் திருவடிகளே சரணம்.

ஸ்ரீமத் வேதமார்க்க ப்ரதிஷ்டாபனாசார்ய

உபயவேதாந்த ப்ரவர்த்தகாசார்யராய்

எழுந்தருளியிருந்த மஹாவித்வான் [கீர்த்திமூர்த்தி]

# ஸ்ரீ.உ.வே. திருமாளிகை ரெ. வீரராகவ ஐயங்கார் ஸ்வாமியின் நூற்றாண்டு விழா நினைவுமலர்

**நாள் :**

நந்தன ௵ ஐப்பசி உத்தரம்

10.11.2012

# ஆசானிடம் என் அனுபவங்கள்

ஸ்ரீவைஷ்ணவச்சுடராழி ஸ்ரீமான் D.A.ஜோசப்,
பாண்டிச்சேரி.

அடியேனை உருவாக்கி அறிவுலகில் உலவவிட்ட ஆசான் ஸ்ரீவைகுண்டவாஸி, ஸ்ரீவைஷ்ணவ ஸ்ரீமான் திருமாளிகை ஸ்ரீ.உ.வே.ரெ. வீரராகவ அய்யங்கார் ஸ்வாமிகளின் சுருக்கமான திவ்ய சரித்திரத்தை முன்பு பார்த்தோம். அடியேனுக்கும் அவருக்கும் இடையே நிகழ்ந்த உரையாடல்கள் மற்றும் சந்திப்புக்களில் சிலவற்றை இந்தக் கட்டுரையில் குறிப்பிடுகிறேன். அது உங்களுக்கு அவரைப்பற்றிய அதிகமான பரிச்சயத்தைக் கொடுக்கும் என்பதுதான் இதன் நோக்கம்.

மதுரை தூய மரியன்னை உயர்நிலைப்பள்ளியில் (St.Mary's High School) அவர் மேல் வகுப்பு மாணவர்களுக்கு தமிழாசிரியராகப் பணிபுரிந்த காலத்தில்தான் அவரை நான்முதன் முதலில் சந்தித்தேன். ஏனென்றால் அதே பள்ளியில்தான் நான் 6ஆம் வகுப்பு முதல் SSLCவரை கல்விபயின்றேன். என்னுடைய 10ஆம் வகுப்புத் தமிழாசிரியராக அவர் வகுப்பறைக்குள் நுழைந்தபோது ஒரு வேறுபட்ட மனிதராகக் காணப்பட்டார். சிகையும், பஞ்சகச்ச வேஷ்டியும் கொண்ட அவருடைய தோற்றம் அந்த வகுப்பு மாணவர்களுக்குப் புதுமையாக இருந்தது.

அன்று அவர் நடத்திய பாடம் எங்கள் பாடப் புத்தகத்திலிருந்த ''எறிபத்தநாயனார் சரித்திரம்''. திருத்தொண்டர் புராணத்தின் பாடல்களை ஒவ்வொரு வரியாக விளக்கி ஈடுபாட்டோடு அவர் விளக்கியது முதலில் அவரை பரிகாசத்தோடு பார்த்த மாணவர்களையும் அமைதிப்படுத்தியது. அந்த வயதில் எனக்கு - சைவம் என்றால் என்ன? வைணவம் என்றால் என்ன?

- என்பதெல்லாம் தெரியாது. ஆனால் இன்றைய நிலையில் நான் சிந்தித்துப் பார்க்கும் போது ஒரு வீரவைணவரான அவர் ஒரு சைவப்பாடத்தை எப்படி த்வேஷம் இன்றி ஈடுபாட்டோடு அப்படி நடத்த முடிந்தது என்று வியப்பாக இருக்கிறது. அன்றைய வகுப்பில் பக்தியின் மேன்மையை நாங்கள் உணர்ந்தோம். இன்று என் மேடைப்பேச்சை கேட்கிறவர்கள் ''சாதாரணமாக ஸ்ரீவைஷ்ணவப்பேச்சாளர்கள் பிற தெய்வங்களையும், மதங்களையும் கண்டித்து இழிவாகப் பேசி மற்ற ஸம்ப்ரதாயத்தைச் சேர்ந்தவர்களுடைய உள்ளத்தைப் புண்படுத்துவார்கள். ஆனால் நீங்கள் வீரவைணவராய் இருந்தும் யார் உணர்வையும் புண்படுத்தாமல் பேசுகிறீர்கள்'' என்று பாராட்டுகிறார்கள். இந்தப் பெருமை அடியேனுடைய ஆசான் ஸ்வாமிகளையே சாரும். இந்தக் குணத்தை நான் அவரிடம் இருந்துதான் கற்றுக்கொண்டேன்.

பத்தாம் வகுப்பு தாண்டிய பிறகு இரண்டு அல்லது மூன்று ஆண்டுகள் இடைவெளிவிட்டுத்தான் அவரை சந்திக்க நேர்ந்தது. நான் ஆங்கிலம் B.A. முடித்தது சட்டக்கல்லூரியில் சேர முடிவானபோது அஞ்சல்வழி தமிழ் M.A. நான் பயில வேண்டும் என்று என் தந்தை விரும்பினார். நான் கல்வி பயின்ற அதே பள்ளியில் தலைமை எழுத்தராகப் பணியாற்றிய என் தந்தையார் அய்யங்கார் ஸ்வாமிகளோடு 25 ஆண்டுகள் பழக்கமுள்ளவராய் இருந்ததால் அவருடைய கல்வியின் மேன்மையை உணர்ந்திருந்தார். எனவே தமிழ் M.A. பாடத்திட்டத்தை நான் அவரிடம்தான் கற்கவேண்டும் என்பது அவருடைய விருப்பம். எனவே தனிப்பட்ட முறையில் தமிழ் M.A. கற்கும் மாணவனாக அவரை அணுகினேன். இதுதான் என் ஆன்மீக வாழ்வின் திருப்புமுனை.

7 வயதில் கோவிலில் இறைவனைப் பிரார்த்திக்கும்போது ''சொர்க்கம் - நரகம் - மோட்சம் - கடவுள் - ஆத்மா - இவற்றைப்பற்றி எனக்கு அறிவுவேண்டும். நான் வேண்டுவது வேறு ஒன்றுமில்லை'' என்று பிரார்த்தித்தவன் நான். நினைவறிந்த நாள் முதல் இந்த ஆன்மீகத்தேடல் என்

உள்ளத்தின் நாலா மூலைகளிலும் முட்டி மோதித் தொல்லைப்படுத்திக் கொண்டிருந்தது. என் கேள்விகளுக்கு நான் சந்தித்த பாதிரிமார்களோ, பௌத்த பிட்சுக்களோ, சமனத்துறவிகளோ, சைவவித்தகர்களோ, படித்த நூல்களோ திருப்தியாக பதில் அளிக்க முடியவில்லை. அந்த முட்டல் மோதல்களை இங்கே எழுதவில்லை. அதை எழுதினால் அது ஒரு நூற் கடலாக விரியும். ஆனால் அய்யங்கார் ஸ்வாமிகளிடம் தமிழ் மாணவனாகச் சேர்ந்தபோது அவர் நெற்றியில் வரைந்துள்ள 3 நேர் கோடுகளைப் பற்றிய விவரம் கேட்டேன். அது மெல்லமெல்ல ஸ்ரீவைஷ்ணவ வித்வத் உரையாடலாக உருவெடுத்தது. அவருக்கு என்பாலும், எனக்கு அவர்பாலும் ஒரு இணைபிரியா ஈர்ப்பை உண்டு பண்ணியது.

நான் குறிப்பிடும் இந்நிகழ்ச்சி நடந்தது எனக்கு 19 வயதுநடந்த காலகட்டம். அதன் பின்னர் ஒரு 20 ஆண்டுகள் எங்கள் இருவருக்கும் கணக்கில்லாத சந்திப்புக்கள், கால அளவை இல்லாத மணிக்கணக்கான பேச்சுக்கள் என்று ஒரு ஆன்மீக உறவு மலர்ந்தது. அவர் எனக்குக் கற்பித்தது தமிழ் இலக்கணம், இலக்கியம், வடமொழி, வைணவம், தர்க்கம், பிற மதங்களைப் பற்றிய சர்ச்சை, சமூக அமைப்புகளைக் குறித்து இந்து மதத்தின் ஏற்பாடு என்று எத்தனை எத்தனையோ! 'திரும்பிப்பார்க்கிறேன்' என்று திரைநட்சத்திரங்கள் பேட்டி கொடுக்கும் காலமிது. நான் திரும்பிப் பார்த்தால் எனக்கே மலைப்பாக இருக்கிறது. அவரது அந்தச் சிறிய தலைக்குள்தான் எவ்வளவு கல்வி அலைகள், கடல்விரிப்புக்கள்!

அவர் நொடிப்பொழுதில் தமிழிலும், ஸம்ஸ்க்ருதத்திலும் கவி புனையும் ஆற்றல் உள்ளவர். இலக்கண இலக்கிய அஸ்திவாரத்தோடு மொழி கற்றவர். 7 நாட்கள், 8 நாட்கள் என்று மக்கள் பேசுகிறார்கள், எழுது கிறார்கள். அது தவறு என்பார். ''நாட்கள் என்றால் 'புதுச்சாராயம்' என்று பொருள்; நாள்கள் என்பதுதான் சரி'' என்பார். 'மென்மேலும் முன்னேறினான்' என்பது தவறு; மேன்மேலும் என்றுதான் சொல்லவேண்டும் என்பார்.

பால்யத்தில் ஸம்ஸ்க்ருத பாடசாலையில் அவர் படித்துக் கொண்டிருந்த போது ஒருநாள் பாடசாலை நிர்வாகிவந்தார். திடீரென மாணவர்களை ஸம்ஸ்க்ருதத்தில் பேசி சோதிக்கத் தொடங்கினார். பயந்து போன ஆசிரியர் இவரை எழுந்துநிற்கச்சொல்லி 'இவனிடம் பேசுங்கள்' என்றார். அந்தச் சிறு வயதில் அவர் சரமாரியாக ஸம்ஸ்க்ருதத்தில் தன்னுடன் உரையாடுவதைக் கண்டு மகிழ்ந்த அவர் இவருக்கு மட்டும் மாதம் 7ரூபாய் சன்மானத் தொகை (Stipend) அறிவித்தார். இந்த நிகழ்ச்சியைப் பலமுறை ஸ்வாமிகள் என்னிடம் சொல்லி அதைக்கேட்டு நான் மகிழ்ந்திருக்கிறேன்.

ஒவ்வொரு பாடம் தொடங்கும்போதும் அந்த நூலை அவர் கையில் கொடுத்து அதன் முதற் பக்கத்தில் எனக்கு வாழ்த்து எழுதும்படி கேட்பேன். அப்படி ''சிலப்பதிகாரம்'' நூல் தொடங்கும்போது அந்த நூலில் அவர் எழுதிய இரண்டு வாழ்த்துப்பாக்களை இதோ உதாரணமாகத் தந்திருக்கிறேன். *(இவை 5 நிமிடத்திற்குள் எழுதப்பட்டவை).*

**திருவுறுக**

நன்னர் நலம்பலவும் நண்ணிப் புவியின்மிசை
துன்னு பணியின்றித் துப்பார்ந்து - மன்னி
மகிழ்க பெருமிதமாய்ச் சோசப் வகையாய்த்
திகழ் சுற்றத்தோடும் சிறந்து.

सर्वाभीष्ट अर्थलाभेन तुष्टः पुष्टः शतंसमाः ।
मोदतां भूतले जोसफ् सर्वजनैः सखिभिः सह ॥

ஸர்வாபீ$_4$ஷ்ட அர்த்த$_2$ லாபே$_4$ன துஷ்ட: புஷ்ட: ஶதம்ஸமா: ।
மோத$_3$தாம் பூ$_4$தலே ஜோசப்$_2$ ஸர்வஜனை: ஸகி$_2$பி$_4$: ஸஹ ॥

இந்த வாழ்த்துப்பாக்களை நான் வேதமாக மதித்தேன், மதிக்கிறேன்.

அவை அப்படியே பலிக்கும் என நம்பினேன், நம்புகிறேன். ஒருமுறை, அதாவது திருமணமான புதிதில், என் அமைதியான வாழ்க்கை புயற் கடலாக மாறியது. நான் ஸ்ரீவைஷ்ணவத்திற்குத் திசை திரும்புவதைச் சகிக்காத மதவெறியர்கள் எனக்கும் என் மனைவிக்கும் உணவில் சில் விஷமிட்டும் மாந்திரீக உபாதைகள் செய்தும் துன்புறுத்தினர். அவற்றின் அளவு சொல்லி மாளா! இதனால் மனம் வெதும்பிய நான் ஒருமுறை ''உங்கள் அருள் வாக்கு இப்படியா பலிக்க வேண்டும்?'' என்று கேட்டுவிட்டேன். அவர் சோர்வுடன் அன்று பிரிந்தார்.

மறுநாள் நாங்கள் சந்தித்தபோது என் துன்பப்பட்டியலைப் பற்றி நான் புலம்பியபோது அவர் முகம் கவலையடையாமலும், கண்கள் தெளிவுடனும் இருப்பதைப் பார்த்தேன். எனக்கு வியப்பாக இருந்தது. அவர் நிதானமாகப் பேசினார். ''உன் பிரச்சினையைப் பெருமாளிடம் விண்ணப்பித்தேன். உன் எதிரிகள் தோற்றுப் போவர்கள். நீ, உன் ஆசைகள் நிறைவேறி புகழுடன் வாழ்ந்து, நீண்ட காலம் இருந்து இறை உலகம் அடைவாய்'' என்றார். 'எப்படிச் சொல்லுகிறீர்கள்? என்று கேட்டபோது ''இவை பூஜை வேளையில் பெருமாள் எனக்குக் கொடுத்த எண்ணங்கள். இப்படித் தோன்றிய எண்ணங்கள் என் வாழ்வில் இதுவரை பொய்யானதில்லை'' என்று கூறி, தம் குடும்ப சம்பவங்களை நிறைய நிறைய எடுத்துக்கூறி மேற்கோளாக விளக்கி ஆறுதல்படுத்தினார்.

'பிரபத்தி எங்கள் குடும்ப சொத்து' என்பார். ''எங்கள் பரம்பரையில் பெருமாளை நாங்கள் சரணடையும்போது அவை வெற்றியாக நிறைவேறுவதையே பிரபத்தி என்று நான் குறிப்பிடுகிறேன்'' என்று விளக்குவார். அவருடைய அருள் வாக்கின்படி இன்றுவரை எம்பெருமான் என் நாவில், குதிரைமுகனாய் இருந்து பேசுகிறான். எனக்குப் புகழ் சேர்க்கிறான். சுதர்ஸன ஆழ்வானாய் இருந்து இக்கட்டுக்களைத் தீர்க்கிறான். நரசிம்மனாய் இருந்து சத்ருக்களை நாசம் செய்கிறான். ஸ்ரீநிவாஸனாய்

இருந்து ஆசைகளை நிறைவேற்றி வைக்கிறான். ஆசான் கழுத்தில் விழ வேண்டிய மாலைகள் எல்லாம் அடியேன் கழுத்தில் விழுகின்றன.

ஸ்வாமிகள் என்னைத் தன்குடும்பத்தில் ஒருவனாகவே பாவித்தார். நாங்கள் பரங்கிப்பேட்டையில் குடியிருந்தபோது தம் மூத்த திருக் குமாரராகிய ஸ்ரீவைஷ்ணவஸ்ரீ ரங்கராஜன் ஸ்வாமிகளை *(இவ்விழாவை நடத்தி இந்த நூலை வெளியிடுபவர்)* அனுப்பி நலம் விசாரித்தார். அவருடைய மற்ற குமாரர்களான ஸ்ரீவைஷ்ணவஸ்ரீமான்கள் சுதர்ஸனன், கண்ணன் ஆகியோரும், திருக்குமாரத்திகள் ஸ்ரீமதிகள் அலமேலுவும் கோகிலாவும் அவர்கள் கணவன்மார்களும் எங்களிடம் தம் குடும்பத்தார் போலவே நடந்து கொள்கிறார்கள். ஸ்ரீமான்கள் சுதர்ஸனன் மற்றும் கண்ணன் ஆகியோருடைய தேவிமார்களும் எங்களை வேறுபாடாகவே நினைப்பதில்லை.

இந்நூற்றாண்டு கண்ட ஒரு ஆழ்வாராகவே அடியேனுடைய ஆசான் ஸ்வாமிகள் வாழ்ந்தருளினார். ஸ்ரீவைஷ்ணவத்தை நடைமுறையில் வாழ்ந்து காட்டியவர் அவர். அவரைச் சந்தித்தபிறகு ஒன்றன்பின் ஒன்றாக என் உள்ளத்தில் எழும்பிக்கொண்டிருந்த சந்தேகக் கேள்விகள் அடங்கிப்போயின.

உண்மையில் அவர் என்னிடம் விரும்பியதே என் கேள்விகளைத்தான். ''இப்படித் தூண்டித் தூண்டிக் கேட்கிறாயே, இதைத்தான் நான் மிகவும் விரும்புகிறேன்'' என்று அடிக்கடி சொல்வார். இந்து மதத்தில் பதில் இல்லாத கேள்வியே இல்லை என்று என்னை உணரவைத்தவரே அவர்தான். சாதாரண ஸம்பாஷணையில் தொடங்கிய உறவு ஆத்ம சம்பந்தமாகப் பரிணமித்தது. அவர் என்னைப் பெயர் சொல்லி அழைக்கும்போது, அவர் என்னை எவ்வளவு நேசிக்கிறார் என்பது தெற்றென விளங்கும். அன்பைக் காட்டுவதற்கு உலகில் ஆயிரம் சொற்கள் இருக்கலாம். அந்த அனைத்தையும் என் பெயர் ஒன்றிலேயே வைத்து அடக்கி அழைப்பார். என் பெயரை நான் மாற்றிக் கொள்ளாததற்கு ஸ்ரீஸ்ரீவரதராஜ எதிராஜ ஜீயர் ஸ்வாமிகளுடைய

ஆணை ஒரு காரணம் என்றால் என் ஆசானின் அன்பு ஒரு காரணம். பலநூறு முறை அவர் திருநாவால் அழைக்கப்பட்ட பெயர் அது! அதை மாற்றிக் கொண்டு அந்த இன்ப உணர்வை நான் இழக்க விரும்பவில்லை.

ஸ்ரீவைகுண்டவாஸி ஸ்ரீஸ்ரீவரத எதிராஜ ஜீயர் ஸ்வாமிகள், வேற்று மதத்தான் ஒருவன் ஸ்ரீவைஷ்ணவத்திற்கு வந்திருக்கிறான் என்பதனை உலகு அறியவேண்டும் என்பதற்காக, என் பெயரையும் தோற்றத்தையும் மாற்றிக் கொள்ள வேண்டாம் - என்று ஆணையிட்டபோது ஆசான் ஸ்வாமிகள் என்னிடம் ''அப்படியே இருக்கட்டும்; ஸ்நாநத்தின் பிறகு வெறும் தீர்த்தத்தால் திருமண் வரைந்துகொள்'' என்றார். அதை இன்றுவரை கடைப்பிடித்து வருகிறேன்.

ஸ்வாமிகள் கோயம்புத்தூரில் தன் திருமகனார் வீட்டில் நோவுசாத்திக் கொண்டு திருமேனி முடங்கி இருந்தபோது குடும்பத்தோடு அவரைச் சென்று ஸேவித்தேன். வெகுநேரம் அளவளாவிக் கொண்டிருந்த அவர் நான் உத்தரவு பெற்று மீளும்போது 'இதுதான் நம் கடைசி சந்திப்பு; இனி கடவுள் உலகில் சந்திப்போம்' என்றார். நானோ இன்னும் இரண்டு மாதம் கழித்து மறுபடி அவர் திருமாளிகைக்கு சென்று ஸேவிக்கலாம் - என்று எண்ணி இருந்ததால் அதை விளையாட்டாக எடுத்துக்கொண்டேன். பல மாதங்களாகியும் பலமுறை முயன்றும் எனக்கு அங்கே போக வாய்ப்பு கிடைக்கவில்லை. அவர் சொன்னதுதான் நடந்தது. அவரை ஸேவித்தது அதுவே கடைசித் தடவை.

''என்னைப்பற்றிய இறுதிச்செய்தி உனக்கு வரும். அதைப்பற்றி வருந்தாதே. அதுதான் எனக்கு ப்ரமோஷன்'', என்ற அவருடைய கடைசிச் சொற்கள் இன்னும் காதில் ஒலித்துக்கொண்டிருக்கின்றன. அவருடைய ப்ரமோஷன் இன்றுவரை எங்களுக்கு தாளாத கமோஷனாகவே இருந்து வருகிறது.

ஸ்ரீவைஷ்ணவச்சுடராழி

ப்ரவசன பாஸ்கரன் ஸ்ரீமான் D.A.ஜோசப்.

ஸ்ரீ:



ஸ்ரீ உ.வே. ரெ. வீரராகவ ஐயங்கார் ஸ்வாமி
ஸ்ரீமதி. திருவேங்கடத்தம்மாள் அம்மங்கார்